## முலடியன பிரதேச சபை
## மாத்தறை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 15 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜுலை 26 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து முலடியன பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 474,496 இற்கான தொகை கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டுள்ளது.

(ஆ) 03 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 921,647 தொகை குறைவாகக் கணக்கீடு செய்திருந்தது.

(இ) கூட்டுத்தொகை ரூபா 1,800,912 தொகைக்கான நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) ரூபா 4,192,341 தொகைக்கான பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் நிதிக்கூற்றுக்களில் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களிலுள்ள 07 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளின் பிரகாரம் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 4,767,646 இற்கான ஒப்பற்ற தன்மை காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

#### 1.3.3 தொங்கல் கணக்கு

தீர்ப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் 2013 ஆண்டு முதல் வித்தியாசமின்றி கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்படும் தொங்கல் கணக்குகளில் உள்ள

ரூபா 36,289 இற்கான செலவு மீதியை இனங்கண்டு உரிய சீராக்கங்கள் மேற்கொண்டு கணக்குகளை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 1,682,612 தொகைக்கான கேள்வி வைப்பு மீதியில் 02 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 962,550 இற்கான மீதி உட்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 523,479 தொகைக்கான வாடகை கட்டுப்பாட்டு கணக்கின் மீதியில், 03 வருட காலத்தை மிகைத்த ரூபா 224,900 இற்கான 06 மீதிகள் உட்படுத்தப்பட்டிருந்தன.

(இ) 2014 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் ஏனைய வருமான நிலுவை மீதியில் காணப்பட்ட இனங்காண முடியாத ரூபா 31,248,246 இற்கான மீதியை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 29,797,688 தொகைக்கான நிலையான சொத்துக்கள் தொடர்பாக உரித்துறுதி, வருடாந்த கணிப்பீட்டு சபை அறிக்கை மற்றும் அட்டவணைகளும், கூட்டுத்தொகை ரூபா 1,163,692 தொகைக்கான பலவின வைப்புக்கள் தொடர்பாக அட்டவணைகளும், கூட்டுத்தொகை ரூபா 31,248,246 தொகைக்கான நிலுவை ஏனைய வருமானங்கள் தொடர்பான விரிவான அட்டவணை, மீதிகள் உறுதிப்படுத்தல்கள், கடன்பட்டோர் பதிவேடும், கூட்டுத்தொகை ரூபா 3,080,472 தொகைக்கான கடன்கொடுத்தோர் மீதி தொடர்பாக அட்டவணைகள், மீதியை உறுதிப்படுத்தல்கள் மற்றும் காலப்பகுப்பாய்வு ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அக் கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,255,523 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,430,062 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 2,174,539 இற்கான வீழ்ச்சி ஒன்றினைக் காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் வருமானத்தின் 74 சதவீதம் அளவில் மொத்த மீண்டுவரும் செலவுகள் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையினால் சுயமாக உருவாக்கிய வருமானத்தை மிகைத்து மீளாய்வாண்டைப் போலவே கடந்த இரண்டு வருடங்களிலும் கணிசமான பெறுமதிகளில் மீண்டுவரும் செலவு அதிகரித்திருந்ததுடன், சபையினால் சுயமாக உருவாக்கி மீண்டுவரும்

செலவுகளை மேவகை செய்வதற்காக எவ்வகையிலும் இயலாத ஒரு நிலைமையினைக் காட்டியது.

## 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டிற்கான நிலுவை ஏனைய வருமான மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 31,248,246 இற்கான மீதிகள் காணப்படுவதால் நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரங்களின் பிரகாரம் திரவத்தன்மை ஒன்று காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 2.4 வருமான நிருவாகம்

### 2.4.1 ஏக்கர் வரி

ஆரம்ப மீதி ரூபா 66,488 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 21,687 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 88,175 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 18,916 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 69,259 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.4.2 வாடகை

ஆரம்ப நிலுவை ரூபா 483,580 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 2,854,085 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 3,337,665 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 2,814,815 தொகையாகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 523,480 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.4.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,278,770 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 11,555,102 தொகை என்பன கிடைக்க வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த இரண்டாம் தர மற்றும் மூன்றாம் தர பதவிகளில் காணப்பட்ட 04 வெற்றிடங்களை நிரப்புவதற்கு, அதே போல் 11 மிகை பதவியினரை முறைப்படுத்துவற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) ரூபா 850,000 தொகைக்கான சபைக்குச் சொந்தமான 02 காணிகள் அமைந்துள்ள இடங்களை இனங்கண்டிருக்காததுடன் கூட்டுப்பெறுமதி ரூபா 10,792,030 தொகைக்கான 09 காணிகளின் எல்லைகளை அடையாளமிட்டு பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 7,967,142 இற்கான கிரயத்தையுடைய இயந்திரமொன்று 2015 ஆண்டு முதல் செயற்படாது காணப்பட்டது.

**3.3 ஒப்பந்த நிருவாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் ரூபா 49,450,000 தொகைக்கான 38 வேலைத் திட்டங்கள் செயற்படுத்துவதற்காக திட்டமிட்டிருந்த போதிலும், ஆண்டின் போது அவற்றின் ஒரு வேலைத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை.

(ஆ) மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து வழங்கியிருந்த ரூபா 1,000,000 இற்கான ஏற்பாடுகள் கிடைத்து ஒரு மாதத்தில் குறிப்பிட்ட செயற்திட்டங்கள் நிறைவேற்றி முன்னேற்றத்தை அறிவிக்காமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 3,650,000 தொகைக்கான ஏற்பாடுகளை இழந்துள்ளது.

**3.4 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

மீளாய்வாண்டின் போது திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக சம்பளங்கள் மற்றும் படிகள், எரிபொருள் மற்றும் வாகன பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 3,603,334 இற்கான செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவற்றில் உழைத்திருந்த வருமானம் ரூபா 69,624 தொகை காணப்பட்டதுடன் உக்கப்படாத குப்பைகள் சபைக்குச் சொந்தமான காணி ஒன்றில் அகற்றப்பட்டிருந்த போதிலும் அக் காணிக்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்று பெற்றிருக்கவில்லை.

**3.5 சுற்றாடல்சார் பாதிப்புக்கள்**

2008 ஜனவரி 25 ஆந் திகதிய 533/16 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஆண்டின் போது சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருந்த 79 வர்த்தக நிலையங்களில் இருந்து ரூபா 269,200 இற்கான வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டிலுள்ள 08 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 7,019,014 தொகையான சேமிப்புக்களும், 03 வருமானக் கணக்குகளில் நெருங்கப்பெறாத இலக்குகளில் கூட்டுத்தொகை ரூபா 6,313,740 தொகையும், காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை அரச நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய த.ப.பா/யஹ/01/ந.ச.லே இலக்கங் கொண்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் சபையினால் நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 471,178 இற்கான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமானம் சேகரித்தல்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்